இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது. ஆகையால்தான், ‘அவர் உயரே ஏறிச் சென்றார்; அப்போது, சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச் சென்றார்; மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்’ என்று மறைநூல் கூறுகிறது. ‘ஏறிச் சென்றார்’ என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா? கீழே இறங்கியவர்தான் எங்கும் நிறைந்திருக்கும்படி எல்லா வானுலகங்களுக்கும் மேலாக ஏறிச் சென்றவர்”. (எபே 4:4-7)

# 58-வது உலக சமூகத் தொடர்பு தினம்

## 'செயற்கை நுண்ணறிவு மற்றும் இதயத்தின் ஞானம்: ஒரு முழு மனித தகவல் தொடர்பு நோக்கி'

வத்திக்கான் : இன்று மே திங்கள் 12-ம் நாள் உலகம் முழுவதும் 58-வது உலக சமூகத் தொடர்புதினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டுக்கான கருப்பொருளாக 'செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence ) மற்றும் இதயத்தின் ஞானம்: ஒரு முழு மனித தகவல் தொடர்பு நோக்கி' என்ற தலைப்புத் தரப்பட்டுள்ளது. இக்கருப் பொருளையொட்டி, 58-வது உலக சமூகத் தொடர்பு நாளுக்காக வழங்கியுள்ள தனது செய்தியில் நாம் எப்படி முழு மனிதராக இருந்து, இந்தக் கலாச்சார மாற்றத்தை ஒரு நல்ல நோக்கத்திற்காக வழிநடத்த முடியும் என்பது குறித்து சிந்திக்கவும் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை.



### இதயத்திலிருந்து தொடங்குவோம்

இந்தச் செயல்முறைக்குள் நாம் ஒவ்வொருவரும் அவரவர் வழியில் நுழைய வேண்டும் என்றும், ஆனால் அதில் உள்ள அழிவுகரமான மற்றும் மனிதாபிமானமற்ற செயல்கள் அனைத்திற்கும் வெளிப்படைத்தன்மையுடனும் கூர்ந்தறியும் திறனுடனும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, இவை யாவும் தொழில்நுட்ப, அறிவியல் மற்றும் அரசியல் சிக்கல்கள் என்றும், மனித இதயத்திலிருந்து பிறக்கும் ஞானமின்றி இவைகளுக்குத் தீர்வு காண முடியாது என்றும் உரைத்துள்ளார்.




எதார்த்தத்தைப் பார்க்கும் ஆன்மிக வழியைக் கடைப்பிடிப்பதன் வழியாகவும், இதயத்தின் ஞானத்தை மீட்டெடுப்பதன் வழியாகவும் மட்டுமே, நம் காலத்தின் நவீனத்தை நாம் எதிர்கொள்ளவும், விளக்கவும் முடியும் என்றும், முழுமையான மனித தொடர்புக்கான பாதையை நம்மால் மீண்டும் கண்டுபிடிக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

மேலும் இதயத்தின் ஞானம் என்பது, ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையை அடையாளப்படுத்துகிறது, ஆனால் அது நம் உணர்ச்சிகள், ஆசைகள், கனவுகள் ஆகியவற்றில் ஈடுபடுகிறது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, அது கடவுளுடனான நமது சந்திப்பின் உள்ளார்ந்த இடமாக உள்ளது என்றும் எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, அப்படியானால், இதயத்தின் ஞானம் என்பது முழு மற்றும் அதன் பகுதிகள், நமது முடிவுகள் மற்றும் அவற்றின் விளைவுகள், நமது பெருந்தன்மை மற்றும் பலவீனம், நமது கடந்த காலம் மற்றும் எதிர்காலம், நமது தனித்துவம் மற்றும் ஒரு பெரிய சமூகத்திற்குள் நமது உறுப்பினருரிமை ஆகியவற்றை ஒருங்கிணைக்க உதவும் நற்பண்பாக அமைத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வாய்ப்பு மற்றும் ஆபத்து

மனிதர்கள் எப்போதுமே தாங்கள் தன்னிறைவு பெற்றவர்கள் அல்ல என்பதை உணர்ந்து, சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்துவதன் வழியாகத் தங்கள் பலவீனத்தை வெற்றிகொள்ள முற்படுகிறார்கள் என்று எடுத்துரைத்துள்ள திருத்தந்தை, தொடக்க கால வரலாற்றுக்கு முந்தைய கலைப்பொருள்கள், படைக் கலன்களின் நீட்டிப்புகளாகப் பயன்படுத் தப்பட்டன, பின்னர் ஊடகங்கள், பேசும் வார்த்தையின் நீட்டிப்பாகப் பயன்படுத் தப்பட்டன, இப்போது நம் சிந்தனைக்கு ஆதரவாக செயல்படும் அதிநவீன இயந்திரங்களை உருவாக்கும் திறன் பெற்றுள்ளோம் என்றும் விளக்கியுள்ளார்.

தொடர்ச்சி, அடுத்தப்பக்கம்.

## மெந்தகாப் திருப்பயணிகள் குவந்தானில் பெந்தகோஸ்து தியானத்தின் கலத்துகொண்டனர்

குவந்தான்: கடந்த 29 ஏப்ரல் அன்று மெந்தகாப், புனித சகாய அன்னை பங்கி லிருந்து 33 தமிழ்ப்பேசும் மக்கள் குவந் தான், புனித தோமையார் பங்கிற்கு ஒரு நாள் திருயாத்திரை மேற்கொண்டனர். இவர்களை அன்புடன் வரவேற்ற பங்குத்தந்தை அருள்பணி ஜோர்ஜ் பாக்கியசாமி அவர்கள், காலை 9.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை பெந்தகோஸ்து பெருவிழாவுக்கான தயாரிப்பாக ஒரு தியான நிகழ்வை நடத்தினார். இந்நிகழ்வில் புனித தோமையார் பங்கின் தமிழ்ப்பேசும் இறைமக்களில் 13 பேரும் கலந்துகண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




"நான் சென்று என் துணையாளரை உங்களுக்கு அனுப்புவேன், அவரே உங்க ளுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார் " என்ற இயேசுவின் வாக்குறுதி இன்று நிறைவேறிய நாள். அன்று திருத்தூதர்களை ஆட்கொண்ட தூய ஆவியார் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு சோத னையால் சோர்ந்து போன நம் மனதினையும், நோயினால் வலுவிழந்த நம் உடலினையும், துன்பத்தினால் தளர்ந்து போன நம் நம்பிக்கையையும் வலுப் படுத்தும்

-அந்தோணி பலவேந்திரன்

# ‘நற்கருணையும் அன்னை மரியாவும்’ கிள்ளான் வட்டார பங்குகளுக்கான பயிலரங்கம் நடைபெற்றது

**கிள்ளான்:** மே மாதம் மரியாவின் மாதம் என்பதாலும், இம்மாதத்தில் நாம் கொண்டாடவிருக்கும் ஆண்டவருடைய திருஉடல் திருஇரத்தம் விழாவையும் முன்னிட்டும் கிள்ளான் வட்டார பேரவை குழு ‘நற்கருணையும் அன்னை மரியாளும்’ என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்தது. கிள்ளான் புனித லூர்து அன்னை, போர்ட் கிள்ளான் புனித அன்னம்மாள், பந்திங், புனித பவுல்



மற்றும் பேதுரு மற்றும் தாமான் பெர்க்கிலி மீட்பின் ஆண்டவர் ஆகிய பங்குகளைச் சேர்ந்த ஏறக்குறைய 500க்கும் மேற்பட்ட பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கு நான்கு மொழிகளில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அருள்பணி கிரிகோரி சான் ஆங்கிலத்திலும், அருள்பணி டேவிட் அருள்நாதன் தமிழிலும், அருள்பணி ஞான செல்வம் அவர்களும் அருள்பணி யூஜின் பெனடிக்ட் அவர்களும் இணைந்து மலாய் மொழியிலும் அருள்பணி மார்ட்டின் தேன் மற்றும் அருள்பணி என்ரூ கூய் இருவரும் சீன மொழியிலும் மேற்கண்ட பயிலரங்கத்தை வழிநடத்தினார்கள்.

புகழ்ச்சி ஆராதனையுடன் இந்த நிகழ்வு தொடங்கப்பட்டது. நற்கருணையும் அன்னை மரியாவின் ஒன்றிப்பையும், இயேசுவும் மற்றும் அன்னை மரியாவின் உறவின் புனிதத்தையும் மிகவும் சிறப்பாக விவரிக்கப்பட்ட்து. உடன்படிக்கைப் பேழைக்கும் அன்னை மரியாளுக்கும் இடையிலான உறவைக் குறித்தும் சொற்பொழிவாளர்கள் தெளிவுற எடுத்துரைத்தனர். இது பங்கு மக்களுக்கு நற்கருணையையொட்டி ஆழ்ந்த புரிதலையும் தெளிவையும் வெளிப்படுத்தியது.

நற்கருணை திருவிருந்திற்கு இறைமக்கள் எவ்வாறு தயார்ப்படுத்தி கொள்ள வேண்டும் என்பதுப் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டது. நற்கருணையின் மீது உள்ள ஆழமான நம்பிக்கையைச் சாட்சியத்தின் வழி தனது அனுபவத்தை அருள்பணி டேவிட் அவர்கள் பகிர்ந்தார்.

நிறைவாக நற்கருணை ஆராதனையும் திருப்பலியையும் கிள்ளான் வடடார அருள்பணியாளர்கள் இணைந்து கூட்டு திருப்பலியியாகக் கொண்டாடினார்கள்.

~நேசா தேவசகாயம் - கிள்ளான்~

**தூய ஆவியார் பெருவிழா**

**19-5-2024**

# 58-வது உலக சமூகத் தொடர்பு தினம் திருத்தந்தை செய்தி



முதல் பக்கத் தொடர்ச்சி.

எவ்வாறாயினும், இந்தக் கருவிகள் ஒவ்வொன்றும், கடவுள் இல்லாமல் கடவுளைப் போல ஆகுவதற்கான தொடக்க கால சோதனையால் தவறாகப் பயன்படுத்தப்படலாம் (காண தொநூ 3), அதாவது, கடவுளிடமிருந்து இலவசமாகப் பெறப்பட வேண்டியதை, மற்றவர்களுடன் சேர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பதை நம் சொந்த முயற்சியால் புரிந்து கொள்ள விரும்புவது என்றும் விளக்கிக் கூறியுள்ளார் திருத்தந்தை.

செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் அறியாமையை போக்க உதவுவதோடு வெவ்வேறு மக்கள் மற்றும் தலைமுறையினரிடையே தகவல் பரிமாற்றத்தை எளிதாக்க முடியும் என்றும், ஆனால் அதேவேளையில், இது மற்றவர்களுடனும் எதார்த்தத்துடனும் நமது உறவை சிதைக்கும்போது விபரீதமாகிறது என்றும் எச்சரித்துள்ளார்.

## மனிதகுலத்தில் வளர்ச்சி

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, மனித நேயத்தில் வளர அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், சிக்கலான, பல இன, பன்மைத்துவ, பல மத மற்றும் பன்முகக் கலாச்சார சமூகமாக மாறுவதற்கு ஒரு தரமான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது நமக்கு முன் சவாலாக உள்ளது என்றும் தெரிவித்துள்ள திருத்தந்தை, இந்தப் புதிய தகவல்தொடர்பு மற்றும் அறிவின் கோட்பாட்டு வளர்ச்சி மற்றும் நடைமுறை பயன்பாடு குறித்து மிகவும் கவனமாக சிந்திக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும் விவரித்துள்ளார்.

## இன்றைய மற்றும் எதிர்காலத்திற்கான கேள்விகள்

இது சம்பந்தமாக, பல கேள்விகள் இயற்கையாகவே எழுகின்றன என்று கூறியுள்ள திருத்தந்தை, உலகம் முழுவதிலும் உள்ள பயனர்களுடன் இணைந்து தகவல் மற்றும் தகவல் தொடர்புத் துறைகளில் உள்ள தொழிலாளர்களின் தொழில்முறை மற்றும் மனித மாண்பை எவ்வாறு பாதுகாப்பது? இயங்குதளங்களின் இயங்குநிலையை எவ்வாறு உறுதி செய்வது? டிஜிட்டல் பணித்தளங்களை உருவாக்கும் வணிகங்கள், பாரம்பரிய தகவல் தொடர்பு ஊடகத்தின் ஆசிரியர்களைப் போலவே உள்ளடக்கம் மற்றும் விளம்பரம் தொடர்பான தங்கள் பொறுப்புகளை ஏற்க எப்படிச் செயல்படுத்துவது? என்பது போன்ற பல கேள்விகளையும் எழுப்பியுள்ள வேளை, இந்த மற்றும் பிற கேள்விகளுக்கு நாம் அளிக்கும் பதில்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் அணுகல் அடிப்படையில் புதிய மாற்றங்களை உருவாக்கி, புதிய சுரண்டல் மற்றும் சமத்துவமின்மைக்கு வழிவகுக்குமா என்பதைத் தீர்மானிக்கும் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

காலத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதன் வழியாகவும், நமது பலவீனங்களை நாம் ஏற்றுக்கொள்வதன் வழியாகவும் அத்தகைய ஞானம் முதிர்ச்சியடைகிறது என்றும், இது தலைமுறைகளுக்கு இடையேயான உடன்படிக்கையில், கடந்த காலத்தை நினைவில் வைத்திருப்பவர்களுக்கும், எதிர்காலத்தை எதிர்நோக்கும் நபர்களுக்கும் இடையில் வளர்கிறது என்றும் தனது செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை.

### திருத்தந்தையின் மே மாத இறைவேண்டல் கருத்து!


இருபால் துறவறத்தார் மற்றும் அருள்பணித்துவ மாணவர்கள் அனைவரும் மனிதநேயம், மேய்ப்புப்பணி, ஆன்மிக மற்றும் குழும உருவாக்கப் பயிற்சிகள் (formation) வழியாக, அவர்களின் தனிப்பட்ட இறையழைத்தலில் வளர்வதற்கு ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்ய விசுவாசிகள் அனைவருக்கும் அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.



# தீயோனிடமிருந்து காக்கும் அரணாக ஆண்டவர் இருக்கிறார்!

இன்று இயேசு உயிர்ப்பின் ஏழாம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். முதல் வாசகத்தில் புனித பேதுரு ஆண்டவர் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக இருந்தவர்தான் தங்களது தூதுரைப் பணியில்செயல்பட முடியும் என முடிவெடுத்து அவ்வாறே சீட்டு போட்டு குலுக்கி மத்தியா பெயருக்கு விழவே அவரை தங்களது தூதுரைப் பணியில் இணைத்துக் கொண்டனர்.

இன்றும் நமது வட்டார அடிப்படை கிறிஸ்துவ சமூகத்தில் சமூக பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் முறையும் இந்த அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. நம்பிக்கையான ஒருவரைத்தான் நாம் தேர்ந்தெடுக்கிறோம் இங்கே மற்றொரு காரியத்தையும் கவனித்தல் அவசியம். தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியாவிடத்தில் ஏதோ சிறப்பான கொடை இருந்திருக்க வேண்டும். அதை இறைவன் அவர் மூலம் பயன்படுத்த அவரை சீட்டு போட்டு தேர்தெடுத்தனர். எனவே நம் மத்தியில் இருக்கும் ஒருவர் தூதுரைப் பணியில் ஆர்வம் உள்ளார் என்றால் அவரிடம் ஏதோ சிறப்பான தாலந்து இருக்கிறது என்று நாம் தான் புரிந்துகொள்ள வேண்டும்.




புனித யோவான் தனது முதல் திருமுகத்தில் அன்பான நபர்களாக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பேசுகிறார். இந்த கடிதத்தின் மற்றொரு பகுதியில் யோவான் கூறியது போல், கடவுள் அன்பாக உள்ளார். எனவே, நாம் மற்றவர்களை நேசிக்கும்போது, கடவுள் நம்மில் இருக்கிறார் என்பது பொருளாகும்.

நற்செய்தியில், இயேசுவின் இறுதி இறைவேண்டல் தொடர்கிறது. திருதூதர்களின் பாதுகாப்புக்காகவும், ஒற்றுமைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் இயேசு வேண்டுகிறார். திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும் இறைவனுக்கு அர்பணிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். கடவுள் தூயவராய் இருக்கிறார். தூய்மையாய் இருக்கும் கடவுளுக்கு அர்பணிக்கும் அனைத்தும் தூய்மையாய் இருத்தல் அவசியம்.

திருத்தூதர்களும் சீடர்களும் ஊழியத்தைத் தொடர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது போலவே இயேசுவின் மற்றும் தூய ஆவியானவரால் அதிகாரமளிக்கப் படுவதை நாமும் எதிர்நோக்குகிறோம். நாமும் இயேசுவோடு சேர்ந்து நற்செய்தியைப் பரப்பும் அவருடைய பணியை மேலும் அதிகரிக்க இறைவேண்டல் செய்ய வேண்டும்.

தூய ஆவியின் கனிகளைக் கொண்டு கனிதரும் மக்களாக வாழ இயேசு நம்மை அழைத்திருக்கிறார் என்பதை உணர்வது உற்சாகமாக இருக்கிறது. கடவுள் நம் மூலம் செயல்பட்டாலும், நாம் யாருக்காக அக்கறைப்படுகிறோமோ அவர்கள் கடவுளின் பிரசன்னத்தை அனுபவிக்க அனுமதித்தாலும், அன்பான சேவையின் செயல்களில் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். உலகில் அவரது மீட்புப் பணியைச் செய்ய கடவுள் நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை என்றும் நினைவில் கொண்டு வாழ்வோம்.

*-ஆ.வி. டேவிட், குளுவாங்*

**பாஸ்கா 7 ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | *தி.பணி 1:15-17* |
| திரு.பாடல் | *103:1-2,11-12,19-20* |
| 2-ம் வாசகம் | *1 யோவான் 4:11-16* |
| நற்செய்தி | யோவான் *17: 11-19* |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**